ஆட்சேபணையும் இல்லை. (குறுக்கீடுகள்) என் தொகுதி பற்றி பேசி முடித்தாகிவிட்டது. எனக்கு வீடு மாத்திரம் கொடுத்தால் போதும். ஆக இவ்வளவு நேரம் பேச வாய்ப்பு அளித்ததற்கு தலைவர் அவர்களுக்கும் அமைச்சரவைக்கும் என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-20.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய பதில் உரை. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரைக்கு குறைந்தது ஒரு மணி நேரம் வேண்டுமென்று கேட்கின்றார். ஆனால், இப்போது அவர்கள் பேச ஆரம்பித்தால், இன்னும் ஒரு மணி நேரம் அவை தாக்குப் பிடிக்குமா என்பதையும் யோசிக்க வேண்டியிருக்கிறது. எனவே, நாளை காலையில் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துக்கொண்டு, அந்த நேரத்தில் பதில் உரையை வைத்துக்கொள்ளலாமா என்பதை முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர்.

10. அரசினர் தீர்மானம்

விதி 32- ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 7-4-1994 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (7-4-1994) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.